**Date** : 24.03.2026

**SC.No.** : **288/2023**

**PW** : **2**

**Name** : **சிலம்பரசன் த.பெ. கருப்பையா**

**Calling** : **தலைமைக் காவலர்**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்குவிசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. வாகன தணிக்கை செய்த சாலையானது ஆள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த இடத்திற்கு அருகே சாமியார்பட்டி கிராமம் உள்ளது என்றால் சரிதான். வாகன தணிக்கை செய்த வாகனமானது எந்த திசையில் வந்தது என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. நாங்கள் எந்த திசையில் இருந்தோம் என்றால் ரோட்டின் மேற்கு திசையில் இருந்தோம். வாகனத்தை மறித்தது யார் என்றால் சார்பு ஆய்வாளர் மறித்தார். அந்த வாகனம் யாருக்கு சொந்தமானது என்று தெரியுமா என்றால் அந்த விபரம் தெரியாது. இந்த வழக்கில் யார் புகார் கொடுத்தது என்றால் சார்பு ஆய்வாளர் ஜெயபாலன் எழுத்து மூலமான புகார் கொடுத்தார். புகார் கொடுக்கும்போது மணி எத்தனை இருக்கும் காலை 8.30 மணியிருக்கும். சம்பவயிடத்தில் வாகனத்தை கைப்பற்றும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை 7.00 மணியிருக்கும். அந்த இடத்திலேயே கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்களா என்றால் இல்லை, காவல்நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது.

2. சம்பவத்தில் சார்பு ஆய்வாளர் மற்றும் எனக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் வைத்து வாள் கைப்பற்றப்பட்டதா என்றால் ஆமாம். வாள் கைப்பற்றியதற்கும் சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்தார்களா என்றால் இல்லை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. நான் அத்தாட்சியில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் சரிதான் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். அந்த அத்தாட்சியில் முத்துக்கிருஷ்ணன் காவலரும், நானும், ஜெகதீசன் என்ற காவலரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக யார் விசாரித்தது என்றால் ஆய்வாளர் விசாரித்தார். என்றைக்கு விசாரித்தார் என்றால் 26.09.2022 ம் தேதி காலை 9.00

மணிக்கு விசாரித்தார். சாமியார்பட்டி விலக்கு ரோட்டிலிருந்து வந்து கிழக்கு பக்கமாக திரும்பும் ரோடு வாணியங்குடி செல்லும் ரோடு என்றால் சரிதான்.

3. ஆய்வாளர் விசாரணையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வாகனம் வந்தது என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகளை சம்பவயிடத்தில் வைத்து யார் கைது செய்தது என்றால் சார்பு ஆய்வாளர் காலை 7.00 மணியளவில் வைத்து கைது செய்தார். நான் சொன்னது போல் சொன்ன நாள், தேதியில் ரோந்திற்கு செல்லவில்லை என்றும் எதிரிகள் நாங்கள் சொல்வது போல் TN 11 W 3587 என்ற காரில் வரவேயில்லை என்றும் காவல்நிலையத்தில் அனாமத்தாக கைப்பற்றி வைத்திருந்த காரை பயன்படுத்தி இந்த எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. 2 வது எதிரி காரை ஏற்றி கொல்ல முயற்சித்தார் என்றும் 1வது எதிரி வாள் வைத்திருந்தார் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாகன தணிக்கை செய்யும் போது வேறு யாரையும் நிறுத்தி சோதனை செய்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தது சார்பு ஆய்வாளர் எனது மேலதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்சொல்வது போல் எந்த வாகன தணிக்கையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறியது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: **2 வது எதிரி தரப்பின் குறுக்கு விசாரணை 1வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் மூலம் தெரிவிக்கப்படுகிறது**

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.24 15:31:08 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**